# இயேசு ராஜா வந்திருக்கிறார்

இயேசு ராஜா வந்திருக்கிறார்
எல்லோரும் கொண்டாடுவோம்
கைதட்டி நாம் பாடுவோம்
கொண்டாடுவோம் கொண்டாடுவோம்
கவலைகள் மறந்து நாம் பாடுவோம்

1. கூப்பிடு நீ பதில் கொடுப்பார் குறைகளெல்லாம் நிறைவாக்குவார்
உண்மையாக தேடுவோரின் உள்ளத்தில் வந்திடுவார்
கொண்டாடுவோம் கொண்டாடுவோம்

2. மனதுருக்கம் உடையவரே மன்னிப்பதில் வள்ளலவர்
உன் நினைவாய் இருக்கின்றார் ஓடிவா என் மகனே(ளே)

3. கண்ணீரெல்லாம் துடைத்திடுவார் கரம் பிடித்து நடத்திடுவார்
எண்ணமெல்லாம் எக்கமெல்லாம் இன்றெ நிறைவேற்றுவார்

4. நோய்களெல்லாம் நீக்கிடுவார் நோடிப்பொழுதே சுகம் தருவார்
பேய்களெல்லாம் நடுநடுங்கும் பெரியவர் திரு முன்னே - நம்ம

5. பாவமெல்லாம் போக்கிடுவார் பயங்களெல்லாம் நீக்கிடுவார்
ஆவியினால் நிரப்பிடுவார் அதிசயம் செய்திடுவார்

6. கசையடிகள் உனக்காக காயமெல்லாம் உனக்காக
திருஇரத்தம் உனக்காக திருந்திடு என் மகனே